[1986 மே 13)

நன்றி சொல்லிக்கொள்கிறேன். கிருஷ்ணகிரியிலே தொழில் மையம்—தொழிற்பேட்டை இருக்கிறது. கிருஷ்ணகிரி வட்டத்திலே கிருஷ்ணகிரி, காவேரிபட்டிணம், பருகூர் போன்ற மூன்று தொகுதிகள் இருக்கின்றன. கிருஷ்ணகிரியிலே தொழிற்பேட்டை இருக்கின்ற காரணத்தினால், பருகூர் தொகுதியிலேயும், காவேரிபட்டிணம் தொகுதியிலேயும் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கி பல்வேறு தொழில்களை உருவாக்குகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற்போது கிருஷ்ணகிரிதான் அரசினுடைய ஆய்விலே இருக்கிறது. மற்றவைகளில் காலம் செல்லச் செல்ல வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

761.—(*வினா எண். 8170): திருமதி டி. யசோதா: மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் வட்டாரத்தை தொழிற்துறையில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு க. இராசாராம்: இல்லை.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் வட்டம் வானம் பார்த்த பூமியாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே அதிகமான தொழிற்சாலைகள் இல்லாத சூழ்நிலை இருக்கின்றபோது, அதனை அரசாங்கம் கருணை உள்ளத்தோடு மறுபடியும் பரிசிலித்து, அதை தொழில் துறையில் பின் தங்கிய வட்டமாக அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் வானம் பார்த்த பூமியாக இருந்தாலும், ஏறக்குறைய 800 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள அந்தப் பகுதியில் 372 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுக்கு தொழிற்சாலைகள் ஏற்கனவே இருக்கின்றன. ஆகவே, செங்கற்பட்டு மாவட்டத்தில், பொன்னேரி, கும்மிடிப்பூண்டி, மதுராந்தகம் போன்றவைகள் மட்டும் தொழில் துறையில் பின் தங்கிய பகுதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவிக்கப்பட்டு அதனாலே அரசாங்கம் பல சலுகைகள் கொடுப்பதாக அறிவித்து அதனுடைய அடிப்படையிலே தொழில்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

அதிபர்கள் அங்கே போய் அதிலே பணத்தை செலவு செய்து காரியங்களை ஆற்றியதற்குப் பிறகு அரசாங்கம் தன்னுடைய தொழில் கொள்கையை மாற்றிக்கொண்டு அந்த உத்தரவினைத் திரும்ப பெறுவதுபோல நடைபெறுவது என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலைகளை தடுக்கின்ற முயற்சி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட, கொள்கையை மாற்றிக்கொண்ட செய்திகள் எனக்குத் தெரியாது. ஏற்கெனவே 3 இடங்கள் உங்களுடைய மாவட்டத்திலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அம்மையாருடைய தொகுதியிலே இல்லாதது அம்மையாருக்கு குறைதான். நாளா வட்டத்திலே நிறைவு செய்ய முயற்சிக்கலாம்.

வெல்லம்பட்டி பகுதியில் இரும்புத்தாது.

762—(*வினா எண். 6111) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** பேரவை துணைத் தலைவர் மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டம் வேடசந்தூர் வட்டம் வெல்லம்பட்டி பகுதியில் ஏராளமான அளவில் இருப்புத்தாது கிடைப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு க. இராசாராம் : (அ) இல்லை.

(ஆ) பதில் எழவில்லை.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு சலுகைகள் மற்றும் ஊதியம்.

763—(*வினா எண். 3539) **திருமதி இரா. சரோஜா :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் அனைத்து சலுகைகளும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?